Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 144/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW4** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ரிசியாந்தினி |
| Husband Name | : | வசந்த் |
| Village | : | இலங்கை அகதிகள் முகாம், மண்டபம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | இல்லத்தரசி |
| Age | : | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

<u>(1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் ஆஜர்.4 ம் எதிரி ஆஜரில்லை, 4 ம் எதிரி தரப்பில் BNSS-355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமநாதபுரம் தாலுகா மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். சா.சாட்சிகள் நிரோஜன், நிருபன் தசாந்தன், திவாகரன், நியுத்அனுஜன், முகாந்தினி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத நந்தகோபாலனை தெரியும். கடந்த 21.02.2024 ம் தேதி மதியம் 02.45 மணியளவில் நான் மண்டபம் முகாம் அருகில் உள்ள காய்கறிக்கடையில் காய்கறி வாங்கிக்கொண்டிருந்தேன். அப்போது கோபாலன் மளிகை கடைக்கு எதிர்புறம் நிரூபன், நிரோஜன், தசாந்தன் ஆகியோர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிரிகளான களஞ்சியராஜா, அவரது அப்பா

மகேந்திரன், நந்தகோபால், முத்துக்குமார், நாகர்ஜீன் ஆகியோர்கள் நிரூபனையும், நிரோஜனையும் பார்த்து 1ம் எதிரி களஞ்சியராஜா இதோ அந்தா நிக்கிறாங்கே தேவுடியா பசங்க அடித்து கொல்லுங்கடா என்று சத்தமாக பேசிக்கொண்டு அவர்களை பார்த்து சென்றார்கள். அப்போது களஞ்சியராஜா கையில் வைத்திருந்த கார்ஸ்பேனரை வைத்து இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று நிரூபன் தலையில் ஓங்கி அடித்தார், எதிரி களஞ்சியராஜாவின் அப்பா மகேந்திரன் நிரூபனின் தலையில் இடது கழுத்து , வலது கண் ஆகீய பகுதிகளில் அருவாளால் வெட்டினார், வெட்டியதில் நிரூபனின் கண் வெளியே வந்துவிட்டது. அப்போது நிருபனின் அண்ணன் நிரோஜன் நிரூபனை காப்பாற்ற விடுங்க என்று சொல்லிபோனபோது களஞ்சியராஜா கையில் வைத்திருந்த கார்ஸ்பானரால் நிரோஜனின் முதுகில் மாறிமாறி அடித்தார். அப்போது எதிரி மகேந்திரன் அருவாளால் நிரோஜனின் முதுகிலும், விலாபகுதியிலும் மாறிமாறி வெட்டினார். அப்போது கூட இருந்த நந்தகோபால், முத்துக்குமார், நாகார்ஜீனா நிரோஜன் மற்றும் நிரூபனையும் கையால் அடித்து கீழே தள்ளினார்கள், கீழே தள்ளியவுடன் காலால் மிதித்தார்கள். நிரூபன் அந்த இடத்தில் மயங்கிவிழுந்துவிட்டார். பக்கத்தில் இருந்த ஆண்கள், பெண்கள் வந்து எதிரிகளை சத்தம்போட்டவுடன் எதிரிகள் அங்கிருந்துகிளம்பி சென்றார்கள். அவ்வாறு கிளம்பி செல்லும்போது எங்ககிட்ட வச்சுக்கிட்டா இதுதான் கதி என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார்கள். பின்பு தசாந்தன் ஆட்டோவில் நிரூபனையும், நிரோஜனையும் மண்டபம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

மண்டபம்முகாம் கடைத்தெருவிலிருந்து என் வீடு சுமார் 500 மீட்டர் துாரமிருக்குமா என்றால் இருக்கும். சம்பவ காலத்தில் நான் என்ன வேலை செய்துகொண்டிருந்தேன் என்றால் நான் வீட்டில் இல்லத்தரசியாகத்தான் இருந்தேன். நிரூபன், நிரோஜன் ஆகியோர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரியல்ல, 20, 30 மீட்டர் தொலையில் உள்ளார்கள். அவர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு கிழக்கே 10, 15 கடைகள் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் மேற்குப்புறமும் 4, 5 கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு பக்கத்தில் உள்ள பாதை மண்டபம் கேம்பிற்கு வரக்கூடிய பிரதானபாதை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்

இடத்திற்கு மேற்கே பூவலிங்கம் என்பவரது காய்கறிக்கடை உள்ளது என்றால் காய்கறிக்கடை உள்ளது,அவர் பெயர் தெரியாது. அந்த சிசிடிவி கேமரா உள்ளது என்று சொன்னால் தெரியாது. சிசிடிவி கேமரா உள்ளது தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் நிரூபனின் கண் வெளியில் வந்துவிட்டது என்று சொல்லியுள்ளதுபோல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபனின் சட்டை மற்றும் அவர் கீழே விழுந்த இடத்தில் இரத்தம்படிந்துகிடந்தது என்றால் சரிதான். நிரோஜனின் உடம்பிலும் இரத்தக்காயத்தால் சட்டையில் இரத்தம்படிந்திருந்தது என்றால் சரிதான். சண்டை எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் 10 – 15 நிமிடம். சண்டை நடந்த விவரம் பற்றி போலிசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் திறந்தவெளி இடம் என்பதால்அங்குள்ள கடைக்காரர்கள் அதை பார்க்கும் வகையில் இருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலிசார் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் 15 நிமிடங்கள். வந்தவுடன் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் நான் சுமார் எவ்வளவு நேரம் இருந்திருப்பேன் என்றால் 10 – 15 நிமிடங்கள். ஆய்வாளர் என்னை சம்பவம் சம்மந்தமாக எப்போதுவிசாரித்தார் என்றால் 17.04.2024ம் தேதி காவல் நிலையத்திற்கு வரவழைத்து காலை 10.00 மணிக்கு விசாரித்தார். அப்போது என்னுடன் நிரூபன், நிரோஜன் உடன் வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள்தான் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றும், நான் தற்போது அவர்கள் அழைத்து செல்லவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், நேரத்தில், இடத்தில் சொன்ன சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், நிரோஜன், நிரூபன் ஆகிய இருவரும் எனக்கு குடும்பஅளவில் பழக்கம் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C. 144/2024**
Sessions .. .. }
} Prosecution – **PW3**
Deposition of witness for } Defence –
} Court –

| | | |
|---|---|---|
| Name | : | தசாந்தன் |
| Father/Husband Name | : | ஜெயரஞ்சன் |
| Village | : | இலங்கை அகதிகள் முகாம், மண்டபம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | டிரைவர் |
| Age | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

(1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் ஆஜர்.4 ம் எதிரி ஆஜரில்லை, 4 ம் எதிரி தரப்பில் BNSS-355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதன்மை விசாரணை:-**

நான் இராமநாதபுரம் தாலுகா மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். சா. சாட்சிகள் நிருபன், நிரோஜன், திவாகரன், நியுத்அனுஜன், ரிசியந்தினி, முகாந்தினி ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத நந்தகோபாலனை தெரியும். கடந்த 21.02.2024 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் மண்டபம் பேருந்துநிலைய ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து நிரோஜன் மற்றும் அவரது அண்ணன் ஆகிய இருவரையும் மண்டபம் அரசு

மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நிரோஜன் கண் மற்றும் முகத்தில் காயங்கள் இருந்தது. நான் சவாரி முடித்துவிட்டு வரும்போது காயம்பட்டு உட்கார்ந்திருந்த நிரோஜன் மற்றும்அவரது அண்ணனை மண்டபம் அரசு மருத்துவமனைக்கு அழைதது சென்றேன். அவர்களுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்குதெரியாது– போலிசார் என்னை விசாரிக்கும்போது மேலே சொன்னவாறுதான் சொன்னேன்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 21.02.2024ம் தேதி மதியம் 02.45 மணியளவில் நான், நிரோஜன் மற்றும் அவரது தம்பி நிருபன் ஆகியோர்கள் சேர்ந்து மண்டபம் இலங்கை அகதிகள் முகாம் கோபாலன் மளிகைக்கடை அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது எதிரிகள் 5 பேரும் நிரோஜன் மற்றும் நிருபனை பார்த்து இந்தா தேவுடியா பசங்க நிக்கிராங்க அந்த தேவுடியா பசங்கள அடித்து கொல்லுங்கடா எஎன்று சொல்லியவாறு எங்களை பார்த்து வந்தார்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. அப்போது களஞ்சியராஜா கையில் வைத்திருந்த கார்வீல்ஸ்பானரால் நிருபனை இந்தோடு செத்துதொலைடா என்று அவர் தலையில் ஓங்கி அடித்தார் என்றும், மகேந்திரன் இத்தோடு செத்து தொலைடா என்று நிருபனை அருவாளால் வெட்டினார் என்றும் அதனால் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். காயம்பட்டு கிடந்த நிருபன் மற்றும் நிரோஜனையும் மண்டபம் அரசு மருத்துவமனையில் அவர்களை சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் என்னுடன் இலங்கை முகாமில் சேர்ந்து இருப்பவர்கள் என்பதால் போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரங்களை மறைத்து தற்போது எதிரிகளை காப்பற்றும் நோக்கில்

உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும்தெரியாது என்றால் சரிதான். தகவல் கிடைத்து மண்டபம் அகதிகள் முகாமிற்கு செல்லும்போது மாலை மணி 03.50– 04.00 மணி இருக்குமா என்றால் இருக்கும். மண்டபம் முகாமிலிருநது அரசு மருத்துவமனை எத்தனை கிமீ தூரம் இருக்கும் என்றால் 2 கிமீ, 15 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.